

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி தலைமை செயற்குழு அவசர கூட்டம் நடைபெற்றது . இதில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி கலந்து கொண்டு புதிய உறுப்பினர் சேர்த்தல் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார். ஒன்றிய, நகர ,பேரூர், செயலாளர்களிடம் புதிய உறுப்பினர் படிவங்களை வழங்கினார்.

# இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் ஆர். காந்தி சிறப்புரை!

*இராணிப்பேட்டை, ஜூன் 21-*

இராணிப்பேட்டை மாவட்ட திமுக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி தலைமையில்அவசர செயற்குழு கூட்டம் நடைபெற்றது .

இதில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி கலந்து கொண்டு புதிய உறுப்பினர் சேர்த்தல் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார். ஒன்றிய, நகர ,பேரூர், செயலாளர்களிடம் புதிய உறுப்பினர் படிவங்களை வழங்கினார்.

இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் மாவட்ட துணை செயலாளர்கள் மு.சிவானந்தம் குமுதா குமார் துரை மஸ்தான் அரக்கோணம் தொகுதி தேர்தல் பொறுப்பாளர்

சூர்யா வெற்றி கொண்டான் சோளிங்கர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பாஸ்கரன் இராணிப்பேட்டை தொகுதி தேர்தல் பொறுப்பாளர் ஆதிசேஷன் ஆற்காடு தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மருது கணேஷ் மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் க.சுந்தரம், மு. கண்ணய்யன், அ.அசோகன் கலைமணி மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

மண், மொழி, மானம் காத்திட 'ஓரணியில் தமிழ்நாடு' கழக புதிய உறுப்பினர் சேர்ப்புத் திட்டம்!

'எல்லாருக்கும் எல்லாம்' எனும் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதால். ஒவ்வொரு வீட்டிலும் ஒருவராவது ஏதேனும் ஒரு திட்டத்தில் பயனாளியாக உள்ளனர். இத்தகைய நலத் திட்டங்களும், மாநிலத்தின் வளர்ச்சியும், தொடர்ந்திடவும், மாநில உரிமைக்கான போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுக்கவும், நமது மண், மொழி, மானம் காத்திடவும் தமிழ்நாட்டின் அனைத்து குடும்பங்களும் ஒரு குடையின் கீழ் ஒன்றாய் இணைத்து, வருகின்ற சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

துளியும் சமரசமின்றி நெஞ்சுரத்தோடு தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்திடும் பொருட்டு "ஓரணியில் தமிழ்நாடு" என உறுப்பினர் சேர்க்கையை கழகம் முன்னெடுக்கவும் கழகத்தின் சார்பில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பூத் கமிட்டிகள் மூலம் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்த பட்சம் 30% வாக்காளர்களை கழகத்தின் உறுப்பினராக இணைத்திட இலக்கு நிர்ணயிக்கப்படு கிறது.வீடு வீடாகச் சென்று அரசின் திட்டங்களையும், உரிமைப் போராட்டங்களையும் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டின் வாக்காளர்களை 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பில் இணைப்பதற்கான செயல்களை மேற்கொண்டு, ஏற்கனவே கழக உறுப்பினர்களாக உறுப்பினர்கள். என அனைவரையும் உறுப்பினராக இணைத்து ஒரு வாக்குச்சவடிக்கு குறைந்த பட்சம் ஈடுபட வேண்டும். 30% உறுப்பினர் சேர்க்கையில் இருப்பவர்கள் புதிய உறுப்பினர் படிவத்தில் வாக்குச் சாவடி எண்ணை கட்டாயம் குறிப்பிட்டு ஏற்கனவே உறுப்பினர் எனில் அதனையும் குறிப்பிட வேண்டும். கழக பொதுக்குழுவில் கழக தலைவர் அவர்கள் அறிவித்தப்படி உறுப்பினர் சேர்க்கையை தேர்தல் பிரச்சாரமாக மேற்கொண்டு ஒவ்வொரு இல்லத்திலும் குறைந்தது 10 நிமிடமாவது செலவிட்டு கழக அரசின் சாதனைகளை பொதுமக்களுக்கு விளக்கி கழகத்தில் உறுப்பினராக சேர்த்து விட வேண்டும்.

உறுப்பினராக சேர்க்கும் போது மகளிர், இளைஞர்கள் இடம் பெற வேண்டும். உறுப்பினர்கள் சேர்க்கப்படும் தகவல்களை செயலியில் உள்ளீடு செய்து அதன் வழியாக கழக தலைவர் அவர்களுக்கும், தலைமை கழகத்திற்கும் எந்தெந்த தொகுதியில் எந்த வாக்குச் சாவடியில் எவ்வளவு உறுப்பினர்கள் சேர்க்கப்படுகின்ற விவரத்தை மாவட்ட கழகம் மூலமாக தலைமை கழகத்திற்கு தெரியபடுத்திட வேண்டும்.

கழக தலைவர்அவர்கள் 25.06.2025 அன்று படிவத்தில் நிரப்பி உறுப்பினர் சேர்க்கை தொடங்கி வைப்பார்.அதன் பிறகு அனைத்து தொகுதியில் உறுப்பினர் சேர்க்கையை தொடங்கப் பட வேண்டும். ஜுலை இறுதி வரை அதாவது 40 நாட்கள் உறுப்பினர் சேர்க்கை நடைபெறும். மாவட்ட கழகம் மூலமாக உறுப்பினர் சேர்க்கைக்கான, வீடுகளின் கதவுகள் வாகனத்தின் பின்புறம் ஒட்டுவதற்கான ஸ்டிக்கர்கள், பாக்கெட் காலண்டர்கள். சிறு புத்தகம் ஆகியன 25.06.2025 தேதிக்குள் நகர, ஒன்றிய, பேரூர் கழகத்திற்கு வழங்கப்படும்.

அடுத்து வரும் இரண்டு மாதங்களில் நமது மாவட்டத்தில் நகர, ஒன்றிய, பேரூர். ஊர் கிளை, வட்ட கிளை கழகச்செயலாளர்கள், தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை நிறைவு செய்திடவும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் தொடங்கி, பாக முகவர்கள் வரை கழகத்தின் அனைத்து உடன்பிறப்புகளும் இதில் முழுமூச்சாக உழைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில் நமது மாவட்டத்தில் உள்ள நகர, ஒன்றிய, பேரூர், ஊர் கிளை, வட்ட கிளை, BLA2, மாவட்டத்தில் உள்ள சார்பு அணி தோழர்கள் அனைவரும் அயராது பாடுபட்டு.

'வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என இக்கூட்டத்தில் ஏக மனதாக தீர்மானிக்கப்படு கிறது.

குஜராத் அகமதாபாத்தில் கடந்த வாரம் நடைபெற்ற துயர சம்பவம் விமான விபத்தில் உயிர் துறந்த அனைவருக்கும் மற்றும் கழக தணிக்கை குழு உறுப்பினர் முகமது சகி அவர்களின் சகோதரர் விபத்தில் மரணம் அடைந்த வேலூர் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தி.அ.முகமது சாதிக் அவரது மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கும் வகையில் இக்கூட்டம் இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்துகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது

### விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில்

# 'ஓரணியில் தமிழ்நாடு"- கழக புதிய உறுப்பினர் சேர்க்கை கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே. மஸ்தான் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

*விழுப்புரம், ஜூன் 21-*

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே. மஸ்தான் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர ஆலோசனை கூட்டம் இன்ற (21.06.2025-சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் ப. சேகர் தலைமையில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள EPS திருமண மஹாலில் நடைபெற உள்ளது. எனவே கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சிபிரதிநிதிகள், அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1.கழக புதிய உறுப்பினர் சேர்த்தல் சம்பந்தமாக,

2.கழக ஆக்கப் பணிகள்,

3.இளைஞரணி சார்பில் கழக அரசின் சாதனைகள்குறித்து தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடத்துவது சம்பந்தமாக,

இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



ஓரணியில் தமிழ்நாடு என்ற தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளில் ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் தற்போது உள்ள மொத்த வாக்குகளில் 30 விழுக்காடு அளவிற்கு உறுப்பினர்களை தி.மு.க.வில் உறுப்பினர்களாக சேர்த்திடும் திட்டத்தை தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் துவக்கி வைத்திட ஏதுவாக வேலூர் மாவட்ட தி.மு.க.அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம் எல் ஏ ஒன்றிய, நகர ,பகுதி மற்றும் பேரூர் செயலாளர்களிடம் வழங்கினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.

### 'திராவிட மாடல்' ஆட்சியை உறுதிப்படுத்தும்

# கீழடி பாதுகாப்பு தொடர்பான மாணவரணி ஆர்ப்பாட்டம்!


**1965**ஆம் ஆண்டு வெடித்துக் கிளம்பிய மாணவர்களின் மொழிப் போராட்டம் திராவிட ஆட்சியை தமிழ்நாட்டில் உருவாக்கியது 2025ம் ஆண்டு கீழடி பண்பாட்டுப் பாதுகாப்புக்கான மாணவர்களின் எழுச்சிமிகுந்த போராட்டம் திராவிட மாடல் ஆட்சியை நிச்சயம் உறுதிப்படுத்தும்.

மதுரை மாநகரம், ஐரோப்பியர்களால் தென்கிழக்கு ஆசியாவின் "ஏதென்ஸ்" என்று அழைக்கப்பட்ட; ஆம்!

முச்சங்கம் கண்ட மூதூர்தான் மாமதுரையம்பதியாகும். வைகை எனும் பொய்யாக் குலக் கொடியின் கரை மீது அமைந்த தென்பாண்டிச் சீமையின் தலைநகருமாகும்! காலச்சுழற்ச்சியால் உருவான இயற்கைப் பேரிடர்கள், வரலாற்றுப் பெருமைக்குரிய மாமதுரையை சிதைத்திருந்தாலும், புதையுண்டுபோன மாமதுரையின் மிச்சங்களே இன்றைக்கு மாமதுரையாக நமக்குக் காட்சி தந்து கொண்டிருக்கிறது. முச்சங்கம் உருவாக்கி தமிழ் வளர்த்த மதுரையில் பல்வேறு இலக்கிய, இலக்கண நூல்களை படித்தறிந்த ஆய்வாளர்கள் மாமதுரையின் தொன்மையினை ஆய்வு செய்யும் பொருட்டு மேற்கொண்ட அகழ்வாராய்ச்சி என்ற அறிவியல் பூர்வமான முயற்சியின் பிரமிக்கத்தக்க வெளிப்பாடுதான் கீழடி அகழ்வாராய்ச்சி முடிவுகளும், சான்றுப் பொருட்களின் வெளிப்பாடுகளும் ஆகும். சுட்டெடுக்கப்பட்ட கருப்பு சிவப்பு மண் ஓடுகளில் பொறிக்கப்பட்டுள்ள குறியீடுகளும், தமிழி எழுத்துக்களும், தமிழினது மொழியின் பேச்சு வடிவத்தினையும், எழுத்து வடிவத்தினையும் எட்டியுள்ளது என்பதனை ஐயப்பாட்டிற்கு கிஞ்சிற்றும் இடமின்றி நிரூபிக்கிறது. மேலும், இங்கு அகழாய்வில் கிடைக்கப்பெற்ற அன்று புழக்கத்திலிருந்த பொருட்களை அறிவியல் அடிப்படையில், அவற்றின் கால எல்லையை நிர்ணயிக்கும் பொருட்டு அதற்கான வெளிநாட்டில் உள்ள ஆய்வகங்களுக்கு அனுப்பி ஆய்வு மேற்கொண்டதில் அந்தச் சான்றுப் பொருட்கள் எல்லாம் கி.மு. 6ம் நூற்றாண்டு காலத்தை முந்தியது என்று ஆய்ந்தறிந்து அறிவித்துள்ளார்கள். அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்து அறிவிக்கப்பட்ட பின்னர், ஒன்றிய அரசிற்கு இதில் ஐயப்பாடு உருவாக இயல்பான காரணங்கள் எதுவும் இருப்பதற்கான வாய்ப்பு இல்லை.

கீழடி அகழாய்வு மேற்கொண்ட அமர்நாத் ராமகிருஷ்ணன் மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் தெரிவிக்கும் கருத்து எதுவெனில், ஒன்றிய தொல்லியல் அகழாய்வுத்துறை, எழுப்பிடும் ஐயங்களுக்கான உரிய பதிலும், விளக்கமும் அவருடைய அறிக்கையிலேயே உள்ளது என்று தெரிவிக்கிறார்கள். ஆனால், ஒன்றிய தொல்லியல் துறை அவரிடம் விவாதித்து, விளக்கம் பெறுவதற்கு பதிலாக, அவரையே புதுடில்லிக்கு அருகில் உள்ள "நொய்டா"விற்கு மாறுதல் செய்துள்ளார்கள்.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்



எனவே, இந்த வித்தியாசமான ஒன்றிய தொல்லியல் துறையின் நடவடிக்கைக்கான காரணத்தை ஆய்வு செய்தால், ஒன்றிய ஆட்சிப் பொறுப்பில் உள்ள பாரதிய ஜனதாக் கட்சியும், அந்தக் கட்சியின் "ராஜகுருவாக" பணி மேற்கொண்டு ஆட்சிக்கான நிகழ்ச்சி நிரலை வழங்கிக் கொண்டிருக்கும் ஆர்.எஸ்.எஸ். (ராஷ்ட்ரிய சுயம் சேவக்சங்) என்ற மதவாத அமைப்பின் சதித்திட்டமாக தான் இருக்க முடியும் என அறிய முடிகிறது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் முழுமுதல் நோக்கமே இந்தியத் துணைக் கண்டத்தை "இந்துராஷ்ட்ராம்" என்ற ஒரே நாடாக உருவாக்குவது, இந்துராஷ்ட்ரத்தின் ஒரே மொழியாக தொடக்கத்தில் இந்தியும், படிப்படியாக சமஸ்கிருதத்தையும் நடைமுறைப்படுத்துவதும்தான்! எனவேதான், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் திட்டப்படி அயோத்தியில் குழந்தை ராமர் கோவில், இல்லாத சரஸ்வதி நதியை இருப்பதாக உறுதி செய்வது ஆகிய இப்படிக் கற்பனையில் இந்தியத் துணைக் கண்டத்தை படிப்படியாக வேதகாலக் கலாச்சாரத்திற்கு வலிந்து கொண்டு சேர்ப்பதுதான் அவர்களின் கனவுத் திட்டமாகும்.

எனவேதான், அவர்களது இந்த அதீத கற்பனைக் கனவுகளை சிதைத்துச் சின்னா பின்னமாக்கும் கீழடி அகழாய்வு முடிவுகளை ஏற்க மறுக்கிறார்கள். தங்களின் புனைவுகளையும், கற்பனை வாதங்களையும் கீழடி அகழாய்வு அறிக்கையில் சேர்க்க முயற்சிக்கிறார்கள். அதற்கு இசைவு தராத தொல்லியல்துறை அதிகாரி அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்களை மாற்றுகிறார்கள்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில்தான் கழகத் தலைவர்,தமிழ்நாடு முதல்வர் 18.06.2025ஆம் நாள் ஒன்றிய தொல்லியல் துறையின் நடவடிக்கைகளைக் கண்டித்து, கீழடி அகழாய்வு அறிக்கையினை உடனடியாக வெளியிட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து, கண்டன ஆர்ப்பாட்டத்தை மதுரை மாநகரில், மாநில மாணவர்கள் அணியினால் நடத்தப்பட வேண்டுமென அறிவிக்கிறார்கள். அந்த அறிக்கையினைத் தொடர்ந்து18.06.2025ஆம் நாள் காலை 11 மணி அளவில் மாமதுரையில் விரகனூர் சுற்றுச்சாலைப் பகுதியில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான இருப்பால் மாணவர்கள் உணர்ச்சிப் பெருக்குடன் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

மாநில மாணவர் அணிச் செயலாளர் ராஜீவ் காந்தியும், உடன் மாநில மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்களும் கலந்து கொண்டு மிகச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். மாவட்டக் கழகத்தின் செயலாளர்கள் கோ. தளபதியும், மணிமாறனும் மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். மாணவப் பிரதிநிதிகள் உணர்ச்சிமிகு உரை நிகழ்த்தினார்கள். கீழடி அகழாய்வு அறிக்கையை உடனடியாக வெளியிடு என்ற முழக்கங்களை இருபால் மாணவர்களும் எழுப்பினர்.

இந்த மகத்தான மாணவர்களின் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு வழித்தடம் அமைத்துக் கொடுத்த திராவிட மாடல் ஆட்சிகளின் தலைவர் முதல்வர் அவர்களுக்கும், இளைஞர் அணையின் மாநிலச் செயலாளர்,தமிழ்நாடு துணை முதல்வருக்கும் மாணவர்கள் தொடர்ந்து வாழ்த்து முழக்கங்களை எழுப்பினர். இதனைத் தொடர்ந்து உறுதிமொழி உணர்ச்சியோடும், எழுச்சியோடும் எடுக்கப்பட்டது. கட்டுரையாளனாகிய நானும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான ஆற்றல்மிகு திருச்சி சிவா அவர்களும் எழுச்சியுரை ஆற்றினோம். தமிழர்களின் பண்பாட்டு, வரலாற்று தொன்மையினை தரவுகளுடன் எடுத்து விளக்கிடும், கீழடி அகழாய்வு அறிக்கையினை உடனடியாக வெளியிட வேண்டும். இல்லையெனில், இந்தப் போராட்டம் தொடரும் எனவும் மேலும் இந்தப் போராட்டம் நாடாளுமன்றத்திலும் தொடர்ந்து எதிரொலிக்கும் எனவும் உணர்ச்சிமிகு உரை நிகழ்த்தினோம். கீழடி அகழாய்வு அறிக்கை என்பது தமிழர்களின் நாகரிக தொடக்கத்தின் கால எல்லையை கி.மு. ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னெடுத்துச் செல்லும் சான்றுகளையும், சான்றுப் பொருட்களையும், அறிவியல் ஆய்வினையும் உள்ளடக்கியதாகும்.

இந்த அறிக்கை பொது வெளியில் வருமானால், மக்களின் பார்வைக்கு வைக்கப்படுமானால் ஒன்றிய அரசின் கற்பனையான "சரஸ்வதி நதி நாகரிகம்" உள்ளிட்ட அனைத்து ஆரியக் கற்பனைக் கட்டமைப்புகளும் தகர்த்து தரைமட்டமாக்கப்படும் என்ற அச்சத்தால், அவசரத்தால் கீழடி அறிக்கையை சிதைக்கத் திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள்.

ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் அரசும், அந்த அரசிற்கு பின்புலமாக சித்தாந்த ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், இந்த முயற்சியை தொடருமானால், 1965ஆம் ஆண்டில் இந்தி ஆதிக்கத் திணிப்பை எதிர்த்து தமிழ்நாட்டில் மாணவர்களின் போராட்டம் வெடித்து பூகம்பமாகக் கிளம்பியது, அதன் விளைவு 1967ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி மலர்ந்தது. ஆம்! இன்று கீழடி தமிழர்களின் பண்பாட்டு தொன்மத்தை விளக்கும் அறிக்கையைத் தடுக்கும் ஒன்றிய அரசை எதிர்த்து மாணவர்கள் தொடங்கியிருக்கும் இந்த மகத்தான தமிழர்களின் பண்பாட்டுப் பாதுகாப்பு எழுச்சிமிகு போராட்டம் மீண்டும், திராவிட மாடல் ஆட்சித் தலைவர் தளபதியார் ஆட்சியை 2026ல் மீண்டும் உறுதி செய்யும் என்பது மட்டும் உறுதி.

தமிழர்களின் உயிர் மூச்சாகக் கருதப்படுவது தாய்மொழியாம், தமிழ் மொழியும், தமிழ் மக்களின் உயர்ந்த பண்பாடுகளுமாகும்! மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் கண்ட இனம் தமிழினம் என்றால், எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன்னரே இலக்கியம் வளர்ந்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அத்தகைய பெருமைக்குரிய உலக நாகரிகங்களோடு ஒப்பிடத்தக்க பண்பட்ட தமிழர் நாகரிகப் பண்பாடுகளைச் சிதைக்கும் முயற்சியில் ஒன்றிய அரசு ஈடுபடுமானால், தமிழ்நாடு தங்களின் மொழியையும், பண்பாட்டையும் பாதுகாத்திட கழகத் தலைவர்முதல்வர் தலைமையில் தொடர்ந்து போராடுவோம், தமிழ்நாடு போர்க்களமாகும், விளைவுகள் எதுவானாலும், ஏற்றிடத் தயாராகும். இதுவே தமிழ் மக்களின் எண்ணமும், சிந்தனையுமாகும்!



மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம் கீழ் செவலம்பாடி ஊராட்சியில் அ.தி.மு.க. – பா.ஜ.க. நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.